1972 ஆகஸ்ட் 21]

Teacher's Day.

* 126 Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU R. KRISHNASWAMY NAIDU): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the District Educational Officers, celebrated "Teachers' Day" at Coimbatore, even some days before the date fixed by the Government for celebrating it; and

(b) the reason for the celebration in advance?

ஆசிரியர் தின விழா.

திரு. கே. ராஜாராம் (திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு சார்பில்): மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) ஆசிரியர் தின விழாவைக் கொண்டாடுவதற்கு அரசு நிர்ணயித்துள்ள தேதிக்கு சில நாட்களுக்கு முன்பே கோவையில் மாவட்டக் கல்வியதிகாரிகள் நடத்தினுர்களா?

(இ) அவ்வாறு முன் கூட்டியே நடத்துவதற்குக் காரண மென்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆசிரியர் தின விழா மாவட்டக் கல்வியதிகாரிகளால் நடத்தப்படுவதில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS

Death Traps

* 127 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government are aware of the many photographs being published in the newspapers about "death traps" in Madras; and

(b) if so, the action taken thereon?

மரணக் குழிகள்.

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில் "மரணக் குழிகள்" இருப்பது பற்றிப் பல புகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளியாகி வருவது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆமெனில், அதையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மழைத் தண்ணிர் கால்வாய்கள் அல்லது சாக்கடைகள் மேலுள்ள ஆள் இறங்கும் வழி மேல் மூடிகள் காணுமற்போனல் அவைகள் மறுபடியும் மூடுவதற்கான நடவடிக்கைகள் உடனுக்குடன் சென்னை மாநகராட்சியினுல் எடுக்கப்படுகிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இரும்பு மூடிகள் போடுவதால் தான் திருடிக் கொண்டு போய்விடுகிருர்கள். அதனுல் சிமெண்டு பலகைக் கற்கள் செய்து அந்த மூடிகளைப் போட்டால் திருடு போகாமலாவது இருக்கும். கார்ப்பொரேஷனுக்கு அதற்கு வேண்டிய ஆலோசனையைச் சொல்ல முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல, ஏற்கனவே இரும்பு மூடிகள் போடப்பட்டிருந்ததால், இரும்பை விற்பதற்காக அவைகளை எடுத்திருக்கிருர்கள். ஆகவே சிமெண்டு காங்கிரீட் பலகை மூடிகளை போடுவது என்று சென்னை மாநகராட்சி முடிவெடுத் திருக்கிறது. அந்த அடிப்படையில் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த மரணக் குழிகளில் விழுந்து, கடந்த ஐந்தாண்டுகளில் எத்தனை பேர் மரணம் அடைந்திருக்கிருர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மரணம் அடைவதற்கு வழி இருக்கிறது என்ற பயத்தின் அடிப்படையில் பெயரிடப்பட்டிருக்கிறதே தவிர, இதுவரையில் அதில் விழுந்து யாரும் மரணமடைந்ததாகத் தெரியவில்லை.